உ

ஸ்ரீ காமாக்ஷி அம்பாள்

# திருவூஞ்சற் பதிகம்



ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவாலய

திருமஞ்சர் திருப்பணி நிதி வெளியீடு

அன்பளிப்பு

உ

விஸ்வப்பிரம்மகுல விஸ்வக்ஞ பண்டிதர்

**ஸ்ரீ சி. ந. சதாசிவம் அவர்களால்**

1880 ம் ஆண்டு பங்குனி உத்தரத்தன்று

**ஸ்ரீ காமாக்ஷி அம்பாளின் மணவிழா**

பதினொராம் நாள்

**ஊஞ்சல் உற்சவத்தின்போது**

பாடப்பெற்ற

# திருவூஞ்சற் பதிகம்

04-05-1993 செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவன்று வெளியிடப்பெற்றது.

# திருவூஞ்சற் பதிகம்

### தேவி மகத்துவம்

தேவியொடு மீசன் செறிந்திரானே யாயி
ருவி யொன்றை யுற்றறியா தாம்

### காப்பு

சீர்கொண்ட பலமணியுண் டாகி மின்னுஞ்
செம்மைதிக ழீழவள நாட்டி னோர்பால்
நீர்கொண்ட செந்நெல்வயல் வண்ணை வாழும்
நிலைவிளங்கு காமாட்சி யூஞ்சல் பாட
ஏர்கொண்ட பொன்னுலகை யாழு மிந்த்ர
னிமையவரோ டெல்லோரும் வணங்கி வாழ்த்துங்
கார்கொண்ட திருக்கரங்க ளைந்து பெற்ற
கணபதிதா ளெந்நாளுங் காப்ப தாமே.

### நூல்

நலந்திகழு நாதவிந்து கால்க ளாக
நயந்திகழும் பரம்பொருணேர் விட்ட மாக
வலந்திகழுங் காலமெலாம் வடங்க ளாக
வரந்திகழு வேதமெலாம் பலகை யாக
புலந்திகழும் பிரணவம்பொன் விதான மாக
பொருடிகளு முபநிடதம் பீட மாக
கலந்திகழும் சலசைநெறி வண்ணை வாழுங்
காமாட்சி யம்மையே யாடீ ரூஞ்சல். 1

உருவோங்கு சாஸ்திரங்கள் தண்ட தாக
உளமோங்கு மாகமங்கள் தகழி யாக
திருவோங்கு கலைக்ஞானம் நூல்க ளாக
திறமோங்கு புராணமெலாந் திரிக ளாக
அருளோங்கு நின்பெருமை நெய்ய தாக
அருவோங்கு பரஞ்சுடரே விளக்க தாக
கருவோங்கு ஜனனமொழி வண்ணை வாழுங்
காமாட்சி யம்மையே யாடீ ரூஞ்சல். 2

சிலைவிளங்கு நுதற்பிறையி லமுத மூற
சீர்விளங்கு மலரடியின் முத்தி தேற
நிலைவிளங்கு சந்நிதியி னீதி வீற
நிறைவிளங்கு வேதமெலா மறையோர் கூற
மலைவிளங்கு மாதவர்க டவத்தி லேற
மனுவிளங்கு ஞானமொளிர் வண்ணை வாழுங்
கலைவிளங்கு ஞானமொளிர் வண்ணை வாழுங்
காமாட்சி யம்மையே யாட லூஞ்சல். 3

அருத்தமிகு நவரத்ன கிரீட மின்ன
அணிவளருங் காதணிக ளசைந்து துன்ன
திருத்தமிகு மங்குசபா சங்கண் மன்ன
சிறப்புமிகு நீலமும்விற் கரும்பும் பின்ன
பொருத்தமிகு பொற்சிலம்பு வேதம் பன்ன
புகழ்வளரு மடியவர்கள் பாத முன்ன
கருத்துமிகு மறைபெருகு வண்ணை வாழுங்
காமாட்சி யம்மையே யாட லூஞ்சல். 4

அந்தமலர் சடைநாகஞ் சுட்டி யாட
அகன்றகுழை யாடிட மூக்குத்தி யாட
சந்தமலர் கங்கணங்கள் பதக்க மாட
தங்கமிகு சரிவளைமே கலைக ளாட
பந்தமல முத்துசரம் பசும்பட் டாட
பதமுறுபா டகஞ்சதங்கை குலுங்கி யா[டக்]
கந்தமலர் வாவிதிகழ் வண்ணை வாழுங்
காமாட்சி யம்மையே யாட லூஞ்சல். 5

மனமாருந் திரிமலமா மழுக்கை நீக்கி
மாலாரு மைம்புலனுங் கதவைத் தாக்கி
வனமாரும் விடையமெலாம் விழலே யாக்கி
மாண்பாருஞ் சைதன்ய சொரூபந் தூக்கி
இனமாரும் பரையெழுத்தின் பயனைத் நோக்கி
எழிலாரு மத்துவித முத்தி தேக்கி
கனமாரும் பொன்மதில்சூழ் வண்ணை வாழுங்
காமாட்சி யம்மையே யாட லூஞ்சல். 6

விண்வளரு மிந்திரவி கவிதை வாங்க
வீணைவளர் தும்புருநா ரதர்கள் பாட
பண்வளரு மரம்பையர்கள் நடன மாட
பலம் வளரும் வாயுசா மரைகள் வீச
எண்வளரு நிதிக்கிழவ னடப்பை தாங்க
எழில்வளரு முனிவரெலா மாசி கூற
கண்வளரு மாடமிகு வண்ணை வாழுங்
காமாட்சி யம்மையே யாட ரூஞ்சல். 7

புவிபடைத்த பிரமன் கைத்தாளம் போட
பொலம்படைத்த வம்பலவ னடன மாட
சுவிபடைத்த விநாயகர்சப் பாணி நீட
தயைபடைத்த வறுமுகவேற் சக்தி கூட
பவிபடைத்த விந்திரன் வந்தேவ ஞட
பலம்படைத்த வச்சுதனுங் கருணைதேட
கவிபடைத்த புலவர்புகழ் வண்ணை வாழுங்
காமாட்சி யம்மையே யாட ரூஞ்சல். 8

விதிவிளங்கு மாகமங்கள் வேள்வி நாட்ட
விண்விளங்குஞ் சோதியெலாம் விளக்கந் தீட்ட
பதிவிளங்கு நூல்களெலாம் பத்தி காட்ட
பலம்விளங்கும் யாகமெலாம் பவத்தை யோட்ட
நிதிவிளங்கு பதுமசங்கம் நினைவைக் கூட்ட
நிறம்விளங்கு மலர்மாதர் வடந்தொட் டாட்ட
கதிவிளங்கு சுரர்பரவு வண்ணை வாழுங்
காமாட்சி யம்மையே யாட ரூஞ்சல். 9

இழைபூண்ட பராபரையே யாட ரூஞ்சல்
ஈசனிடத் தாரியையே யாட ரூஞ்சல்
மழைபூண்ட மலைமகளே யாட ரூஞ்சல்
மகதநன்னாட் டீஸ்வரியே யாட ரூஞ்சல்
கழல்பூண்ட சிவகாமி யாட ரூஞ்சல்
காமக்கோட் டத்துமையே யாட ரூஞ்சல்
கழைபூண்ட சோலைதிகழ் வண்ணை வாழுங்
காமாட்சி யம்மையே யாட ரூஞ்சல். 10

சிறையகலு மலைமகளே யாடீ ரூஞ்சல்
திரையகலு மலைமகளே யாடீ ரூஞ்சல்
மறையகலு மாதேவி யாடீ ரூஞ்சல்
மருளகலு மாதேவி யாடீ ரூஞ்சல்
பிறையகலு வாணுதலீ யாடீ ரூஞ்சல்
பிழையகலு வானுதலி யாடீ ரூஞ்சல்
கறையகலும் பண்ணைசெறி வண்ணை வாழுங்
காமாட்சி யம்மையே யாடீ ரூஞ்சல். 11

தேமருவு வேதசிவா கமங்கள் வாழி
திருமருவு கற்புடைய மாதர் வாழி
பூமருவு நால்வருணத் தவர்கள் வாழி
பொழின்மருவு மானிரையும் முகிலும் வாழி
பாமருவு புலவரொடு பைங்கூழ் வாழி
பயன்மருவு விபூதியுமஞ் செழுத்தும் வாழி
காமருவு பண்ணைசெறி வண்ணை வாழுங்
காமாட்சி யம்மையே வாழிவாழி. 12

## எச்சரீக்கை

திருவாருரு பதமேதரு தேவீ யெச்சரீக்கை
சிலைவாணுத லொளியாய்வளர்த் தேனே யெச்சரீக்கை
மானேவருகை யானிட மாதே யெச்சரீக்கை
மறைபோற்றிடு பதமேவிய மங்கா யெச்சரீக்கை
பஞ்சாட்சரத் தொன்றாய்வளர் பரையே யெச்சரீக்கை
பகையாதரு ணீலோற்பல பாணீ யெச்சரீக்கை
பதுமன்பணி பதந்தந்தருள் பரமே யெச்சரீக்கை
எழிலாய்வளை கழையேந்திய விறைவீ யெச்சரீக்கை
ஏகாம்பரர் குழையத் தழுவின்பே யெச்சரீக்கை
உருவாகிய பாசாங்குச வுமையே எச்சரீக்கை
தருமமெனு மிடபம்மிவர் தாயே எச்சரீக்கை
சிவனாரிரு விழிபொத்திய திறமே யெச்சரீக்கை
சிவபூசைசெய் திறங்காட்டிய தெளிவே யெச்சரீக்கை
சீராகிய கருணாநிதி திருவே யெச்சரீக்கை
பேராகிய சிவனாரருட் பேறே யெச்சரீக்கை
துணையாகிய விளமாமுலைத் தோகா யெச்சரீக்கை
வணைமாநகர்க் காமாட்சியம் மணியே யெச்சரீக்கை.

## பராக்கு

தேனொழுகும் பூங்கொன்றைச் செல்வீ பராக்கு
மானிமிருங் கையேந்தி மானே பராக்கு
சந்த்திரமுகத் தேவியரே தாயே பராக்கு
சதுர்ப்புஜநல் லுத்தமியே சத்தீ பராக்கு
சிவனருமைத் திருமேனி குழைத்தாய் பராக்கு
அரனருமைக் கண்புதைத்த ஆயே பராக்கு
அடியவர்கள் பிணியகற்று மன்பே பராக்கு
மிடிமையினை நீக்கியருள் மேலோய் பராக்கு
மகப்பேறு தந்தருளு மாதா பராக்கு
அகத்தேறு மயலகற்று மருளே பராக்கு
ஆனைமுகத் துத்தமனை யளித்தாய் பராக்கு
ஆறுமுகத் தெம்பரனி னன்னாய் பராக்கு
உருள் வண்ணைப்பூவா ளுமுமையே பராக்கு
அருள்வண்ணைக் காமாட்சி யம்மே பராக்கு.

## மங்களம்

வெள்ளிமலை நாயகிக்கு மங்களம் — வேதம்
வேண்டு மருட்பூஷணிக்கு மங்களம்
நான்கு கரத்தம்மையர்க்கு மங்களம் — நல்ல
நாதாந்த வஸ்துவுக்கு மங்களம்
பாசாங்குச பாணியர்க்கு மங்களம் — வல்ல
பராசக்தி யுமையவர்க்கு மங்களம்
நீலோற்பல தாரணிக்கு மங்களம் — நித்ய
நிமலபரி பூரணிக்கு மங்களம்
கருப்புவிற் றரித்தவர்க்கு மங்களம் — கண்ணிற்
காட்சிதரு மங்கையர்க்கு மங்களம்
முத்திதரு மம்பிகைக்கு மங்களம் — மூல
மும்மூர்த்தி யானவர்க்கு மங்களம்
மகதநாட் டாரியைக்கு மங்களம் — எங்கள்
மனோன்மணி சவுந்தரிக்கு மங்களம்
காஞ்சிபுரக் கன்னியர்க்கு மங்களம் — ஞானக்
கருப்பொருளா மன்னையர்க்கு மங்களம்
கருணாகரத் தேவியர்க்கு மங்களம் — வண்ணக்
காமாட்சி யம்மையர்க்கு மங்களம்.

முற்றிற்று

திருச்சிற்றம்பலம்

✠

இப்பிரசுரத்தை

இலவசமாக அச்சிட்டு வழங்கியவர்கள்

**சாந்தி அச்சகம்**

நாச்சிமார் கோவிலடி,

யாழ்ப்பாணம்.